Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 35/2022

**2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.1 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | கூலிவேலை |
| பெயர் | - | குமார் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | செல்லமுத்து | சமயம் | - | |
| கிராமம் | - | தாய்முடி எஸ்டேட் | வயது | - | 63 |
| சாதி | - | | | | |

**<u>24.01.2024</u>**

**(1,, 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் தாய்முடி எஸ்டேட்டில் வசித்து கூலிவேலை செய்துவருகிறேன். 08.11.2020 மதியம் 03.30 மணியிருக்கும். தாய்முடி எஸ்டேட்டில் வாசகசாலை என்று ஒன்று உள்ளது. அதில் சின்ன பெட்டிக்கடை மாதிரி ஒன்று வைத்துள்ளேன். அங்கு ஆஜர் எதிரிகள் வந்து சிகரெட் கொடு என்று கேட்டார்கள்.

2. அப்போது நான் இல்லை முடிச்சாச்சி என்று சொன்னேன். அதற்கு ஆஜர் எதிரிகள் புண்டா மவன நான் கேட்டா சிகரெட் தரமாட்டியா அப்படின்னு வார்த்தையை பேசிவிட்டு உட்கார ஸ்டுலை சரத் எடுத்து தலையில் அடித்துவிட்டார். அதில் எனக்கு தலையில் அடிப்பட்டு 4 தையல் போட்டார்கள். நான் ஐயோ அம்மா என்று கத்தினேன். அங்கு யாரும் இல்லை. அப்புறம் வெளியில் ஓடிவந்தேன்.

3. அன்பு, பாபு ஆகியோர் என்னை வால்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துவந்தார்கள். அங்கு இரவு சிகிச்சை எடுத்துக்கொண்டு காலையில் டிஸ்சார்ஜ் ஆகிவிட்டேன். மறுநாள் முடீஸ் காவல் நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ. 1 ஆகும்**.

4. சேரை எடுத்து என்னை அடித்ததாக சொல்கிறேனே அதைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். அந்த சேர் தான் தற்போது நீதிமன்றத்தில் என்னால் அடையாளம் காட்டப்பட்டது.

அதில் சா.பொ.1 ஆகும். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.